matric-march-2010

**5401**

| Register Number | | | | | | |
|---|---|---|---|---|---|---|

# தமிழ் — முதல் தாள்

## ( செய்யுள், உரைநடை )

நேரம் : $2\frac{1}{2}$ மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

*குறிப்பு* : i) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் இருத்தல் வேண்டும்.

ii) வினா எண் III க்குச் செய்யுள் வடிவில் விடை எழுதுதல் வேண்டும்.

I. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **ஏழனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளில் விடை எழுதுக. $7 \times 2 = 14$

1. எது வேதனை என்று திரு. வி. க. கூறியுள்ளார் ?
2. யாரை வருத்தலாகாது ?
3. வாழ்வார், வாழாதவர் யாவர் ?
4. சிலம்பு உணர்த்தும் மூன்று நீதிகளைக் குறிப்பிடுக.
5. பாடாண் திணை - விளக்குக.
6. குறுமுனிக்கு அச்சம் பிறக்கக் காரணம் என்ன ?
7. தொன்னையுள்ளம் எது ?
8. தொற்றுக் கிருமித் தொல்லையிலிருந்து தப்ப முற்றும் ஒழிக்க வேண்டியது எது ?
9. தேவாரம் - பெயர்க்காரணம் கூறுக.

II. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **ஐந்தனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் ஆறு வரிகளில் விடை தருக. $5 \times 4 = 20$

10. திரு. வி. க. பற்றிக் குறிப்பு வரைக.
11. கண்ணகியை, இளங்கோவடிகள் எவ்வாறு அறிமுகப்படுத்துகிறார் ?
12. 'யாதைச் சாற்றுகேன்' இத்தொடர் பொருளை விளக்குக.
13. பாண்டியன் நன்மாறனின் சிறப்புகளாகச் சீத்தலைச் சாத்தனார் கூறுவன யாவை ?
14. கடலின் மேன்மைத் தன்மைகள் யாவை ?
15. பாரத நாட்டை ஒளிர்தரு நாடு எனப் பாரதியார் கூறக் காரணங்கள் யாவை ?
16. திருவேங்கடத்து இறைவனை நம்மாழ்வார் எங்ஙனம் போற்றியுள்ளார் ?

[ Turn over

III. பின்வருவனவற்றை அடிபிறழாமல் எழுதுக :

17. 'நாடெலாம்' ..... எனத் தொடங்கும் இறைவாழ்த்துப் பாடலை அடிபிறழாமல் எழுதுக. 4

18. 'தோன்றின்' ..... எனத் தொடங்கும் குறட்பாவை எழுதுக. 2

19. 'நீர்த்து' என முடியும் குறட்பாவை எழுதுக. 2

IV. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் **ஒன்றனுக்கு** மட்டும் பதினைந்து வரிகட்கு மிகாமல் விடை எழுதுக : 1 × 8 = 8

20. புகழுடையார் எய்தும் மேன்மையும், அது இல்லாதாரது தாழ்வினையும் விளக்கி எழுதுக.

21. மங்கல வாழ்த்துப் பாடலால் தெரிய வரும் கண்ணகி கோவலன் பண்பு நலன்களை விளக்கி எழுதுக.

22. பாரதிதாசன் உலக ஒற்றுமை பற்றிக் கூறும் கருத்துகளைத் தொகுத்தெழுதுக.

V. 23. பொருத்துக : 4 × 1 = 4

அ) தொடை — தேனீ

ஆ) நறை — திரை

இ) பிடி — மாலை

ஈ) மதுகரம் — தேன்

— பெண் யானை.

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்க :** 6 × 1 = 6

24. திரிகடுகத்தை இயற்றியவர் .................. .

அ) காரியாசான் ஆ) நல்லாதனார் இ) நாகனார்.

25. கம்பரைப் புரந்த வள்ளல் .................. .

அ) குமண வள்ளல் ஆ) சடையப்ப வள்ளல் இ) பாரி வள்ளல்.

26. புறநானூற்றுப் பாடல்கள் சிலவற்றை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் .................. .

அ) ஜி. யு. போப் ஆ) வீரமாமுனிவர் இ) ஹீராஸ் பாதிரியார்.

27. கலம்பக உறுப்புகள் .................. .

அ) ஆறு ஆ) பன்னிரண்டு இ) பதினெட்டு.

28. சிற்றிலக்கிய வகை .................. .

அ) அறுபத்து நான்கு ஆ) தொண்ணூற்றாறு இ) எண்பத்தாறு.

29. 'பாரதநாடு பார்க்கெல்லாம் திலகம்' என்றவர் .................. .

அ) பாரதிதாசன் ஆ) பாரதியார் இ) வாணிதாசன்.

VI. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **ஐந்தனுக்கு** ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளில் விடை எழுதுக. 5 × 2 = 10

30. திரு. வி. க. 'கொழுகொம்பு' என்று எதனைக் குறிப்பிடுகிறார் ?

31. ஒரு துறைக் கோவை - விளக்குக.

32. செய்ந்நன்றி மறவாமைக்கு வ. உ. சி எடுத்துக் காட்டும் திருக்குறள் யாது ?

33. பெரியார் என்னும் சொல் எதனை நினைவுக்குக் கொண்டு வருகிறது ?

34. கலிலியோ கண்ட உண்மை யாது ?

35. சீறாப்புராணம் எங்கு எவர் உதவியால் அரங்கேற்றப்பட்டது ?

36. புகழ்பாடச் சொன்ன புல்லர்களாகக் குறிப்பிடப் பெறுவோர் யாவர் ?

VII. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **நான்கனுக்கு** ஒவ்வொன்றிற்கும் *ஆறு* வரிகளில் விடை எழுதுக. 4 × 4 = 16

37. ஔவையார் தம் வாய் யார் யாரைப் பாடியதாகக் கூறி பெருமைப்படுகிறார் ?

38. இராமன் விளைவுக்கு அடிப்படையாக அமைந்தது எது ? எப்படி ?

39. பெரியாரின் தனிச் சிறப்புகளாக நெ. து. சுந்தரவடிவேலு குறிப்பிடுவன யாவை ?

40. எவற்றை மேன்மேலும் படிக்க வேண்டுமென மு. வ. விரும்புகிறார் ?

41. 'சர்க்கரை தொண்டை மட்டும், சவ்வாது கண்ட மட்டும்' என்னும் பழமொழி விளக்கும் கருத்து யாது ?

42. அப்துல்கலாம் நம் மக்களை எவ்வாறு மூவகைப்படுத்துகிறார் ?

VIII. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் **ஒன்றனுக்கு** மட்டும் பதினைந்து வரிகட்கு மிகாமல் விடை எழுதுக. 1 × 8 = 8

43. அனந்த கவிராயர் பாட்டுக்கும் பேச்சுக்கும் பரிசு பெற்ற நிகழ்ச்சியைத் தொகுத்தெழுதுக.

44. வ. உ. சி. அவர்களின் செய்ந்நன்றி மறவாப் பண்பினை விளக்குக.

45. ஔவையாருக்கும், செல்வர்களுக்கும் இடையே நிகழ்ந்த உரையாடலைச் சுருக்கி வரைக.

[ Turn over

IX. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க : $4 \times 1 = 4$

46. நம் நாட்டில் இன்னும் ஆராய வேண்டிய வளங்கள் .................. .

அ) கனிம வளங்கள்

ஆ) மண் தாதுக்கள்

இ) கடலடி வளங்கள்.

47. ஒரு துறைக்கோவை என்பது .................. .

அ) அகத்துறைச் சிற்றிலக்கியம்

ஆ) சிலேடை

இ) அந்தாதி.

48. இளங்கோவின் காவியப் பெண்மனி .................. .

அ) கஸ்தூரிபாய்

ஆ) கியூரி அம்மையார்

இ) கண்ணகி.

49. உமறுப்புலவரை போற்றிப் பாதுகாக்க முன்வந்த புரவலர் .................. .

அ) வாலை வாரிதி

ஆ) அபுல்காசீம் மரைக்காயர்

இ) உசேன் நயினார்.

X. கீழ்க்காணும் சொற்களுள் எவையேனும் **இரண்டினை** மட்டும் வாக்கியத்தில் அமைத்து எழுதுக. $2 \times 1 = 2$

50. அ) இன்றியமையாதது

ஆ) திரும்பத் திரும்ப

இ) எண்ணற்ற.